# பாடிப் பணிவோம்



குழந்தைக் கவிஞர்

# பாடிப் பணிவோம்


குழந்தைக் கவிஞர்

அழ. வள்ளியப்பா



செல்வி பதிப்பகம்

காரைக்குடி - 623001.

செல்வி - 68

முதற்பதிப்பு - அக்டோபர் 1979

O, 31, 1N227, P
L9

விலை ரூ. 2-00

Sri Ram Printers, Sekkalai Road, Karaikudi - 623 001.

*Title* : PAADI-P-PANIVOM

*Author* : CHILDREN'S POET
AL. VALLIAPPA

*Language* : TAMIL

*Subject* : CHILDREN'S
PRAYER SONGS

*Book Size* : CROWN 8 Vo

*Pages* : 40+2

*Price* : Rs. 2-00

*Edition* : FIRST EDITION
OCTOBER 1979

*Publisher* : SELVI PATHIPPAHAM
KARAIKUDI-623 001.

*Classification* : O, 31, IN227, P
L9

# ஆசிரியரைப்பற்றி......

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | அழ. வள்ளியப்பா |
| பிறந்த நாள் | : | 7—11—1922 |
| தொழில் | : | இந்தியன் வங்கியின் காரைக்குடிப் பகுதி வளர்ச்சி மேலாளர். |
| குறிப்பு | : | 13 வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். |
| இயற்றிய நூல்கள் | : | இதுவரை குழந்தைகளுக்காக 53 நூல்கள் |
| அரசினர் பரிசுகள் | : | 1. இரண்டு கவிதை நூல்கள் மத்திய அரசின் பரிசு பெற்றுள்ளன.<br>2. ஆறு நூல்கள் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளன. |
| குழந்தை எழுத்தாளர் சங்கம் | : | 1950ல் முதன் முதல் குழந்தை எழுத்தாளர்களை ஒன்றுசேர்த்து இச்சங்கத்தை நிறுவி, செயலாளராகவும், தலைவராகவும், ஆலோசகராகவும் இருந்து தற்பொழுது மீண்டும் தலைவராகப் பணியாற்றி வருகிறார். |
| இலக்கியப் பணி | : | தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும், தென்மொழிப் புத்தக டிரஸ்டின் குழந்தைப் புத்தகத் தனி அலுவலராகவும் பணிபுரிந்தவர் காரைக்குடி குழந்தை இலக்கியச் சங்கத் தலைவராகவும், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கப்பொருளாளராகவும் செயலாற்றுபவர் |
| சிறப்பு | | 1961-ல் நடந்த குழந்தை இலக்கிய மாநாட்டில் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.<br>18-4-76ல் குழந்தை எழுத்தாளர்சங்க வெள்ளி விழாவில் குடியரசுத் தலைவர் ஃபக்ருதீன் அலி அகமத் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கேடயம் வழங்கினார்.<br>1972ல் பாரதி இளைஞர் சங்கம் இவரது பொன் விழாவையொட்டி "பிள்ளைக் கவியரசு" என்ற பட்டம் பொறித்த கேடயத்தை வழங்கிச் சிறப்பித்தது.<br>கவிமணி, ராஜாஜி, கல்கி, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வ., நாமக்கல் கவிஞர். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை போன்ற அறிஞர் பலரின் பேரன்பையும் பாராட்டையும் பெற்றவர். |

## ஆசிரியர் கூறுகிறார்...

"பிள்ளைகளுக்காகப் பல பாடல்கள் பாடியிருக்கிறீர்களே, கடவுளைப் பற்றிப் பாடியிருக்கிறீர்களா?" என்று ஒரு நண்பர் என்னிடம் கேட்டார்.

"முதல் முதலாகப் பத்திரிகையில் வெளிவந்த எனது பாடலே கடவுளைப் பற்றிய பாடல்தான். என் முதல் புத்தகத்தில் முதலாவதாக இருக்கும் பாடலும் அதுவே. 'கண்ணன் எங்கள் கண்ணனும்' என்று தொடங்கும் அந்தப் பாடல்..."

"என்ன! 'கண்ணன் எங்கள் கண்ணனும்' பாடல் நீங்கள் எழுதியதா? அது ஏதோ ஒரு நாடோடிப்பாடல்என்றல்லவா நினைத்தேன். பல ஆண்டுகளாகக் கேட்டுவருகிறேனே! எப்போது எழுதினீர்கள்?"

"1944-ஆம் ஆண்டில்"

"அப்படியா! இந்தப் பாட்டைக் குழந்தைகள் எவ்வளவு ஆனந்தமாகப் பாடுகிறார்கள்! எப்படி அபிநயத்துடன் பாடி மகிழ்கிறார்கள்! மேடை நடுவிலே கண்ணன் வேஷத்திலே ஒரு சின்னஞ்சிறு குழந்தையை நிறுத்திவைத்து, பல குழந்தைகள் உற்சாகமாக இந்தப் பாடலைப் பாடுவதைப் பள்ளி விழாக்களிலே பார்த்திருக்கிறேன். பாடலுக்கு வயது 35 ஆனாலும், இன்னும் இளமையாக இருக்கிறதே!"

"என்றும் இளைஞராய் இருக்கும் கண்ணனையும், பாலமுருகனையும் பற்றி யார் பாடினாலும், அப்பாடல் என்றும் இளமையாக, புதுமையாக, அழகாகத்தான் இருக்கும்."

கண்ணன் பாட்டுக்குப் பிறகு, பால முருகன், பிள்ளையார், கலைமகள் முதலிய தெய்வங்களைப் பற்றிக் குழந்தைகளுக்காகச் சில பாடல்களை எழுதினேன். நானும் எங்கள்

வீட்டுப் பிள்ளைகளும் தினந்தோறும் இரவு நேரத்தில் பூசை அறையிலே அருட்செல்வர்கள் இயற்றிய பல பாடல் களைப் பாடுவோம். நாளடைவில்,ஒவ்வொரு கடவுளுக்குப் ஒரு பாடல் எழுதவேண்டுமென்ற ஆசை என் உள்ளத்தில் தோன்றியது. அதன் விளைவாகச் சில பாடல்களை எழுதினேன். தினந்தோறும் அப்பாடல்களை நாங்கள் பாடுவோம். அப்பாடல்களைத் தவிர அவ்வப்போது சில மலர்களுக்காகவும்,தொகுப்புகளுக்காகவும் சிலபாடல்களை எழுதினேன்.

ஒருநாள் நான் பணிபுரியும் பாங்கிற்கு வருகைதந்த ஒரு சகோதரி, "நாங்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிவன் கோவிலில் சேர்ந்து பாடிவருகிறோம். எங்களுக்கு உதவுகிற மாதிரி பாட்டுப் புத்தகம் ஏதாவது எழுதியிருக் கிறீர்களா?" என்று கேட்டார்கள்.

'இல்லை' எனப் பதிலளித்த நான், அன்று மாலை வீடுதிரும்பி யதும், இதுவரை நாம் எழுதிய பக்திப்பாடல்கள் எத்தனை இருக்குமென எண்ணிப் பார்த்தேன். அவற்றையெல்லாம் அன்று இரவே தேடிப் பிடித்தேன். அவற்றைப் பிரதி எடுத்தேன். ஒரு சிறு புத்தகமாக வெளியிடலாம் என்ற நம்பிக்கை தோன்றியது.

மறுநாள் என் இனிய நண்பரும், செல்வி பதிப்பக அதிபரு மாகிய **திரு. வீர. சிவராமன்** அவர்களிடம் கைப்பிரதியைக் காட்டி, "இவற்றை எந்த அச்சகத்தில் கொடுக்கலாம்?" எனக் கேட்டேன்.

உடனே அவர், அப்பாடல்களைத் தாமே வெளியிட விரும்புவ தாகக் கூறினர். மகிழ்ச்சியோடு இசைந்தேன்.

படங்கள் இல்லாமல் என் புத்தகங்கள் எதுவுமே வெளிவந்ததில்லை என்பதை நன்குணர்ந்த நண்பர் சிவராமன், இப்பாடல்களையும் படங்களுடன் வெளியிட விரும்பினார். இன்றுள்ள நிலையில் படங்களுடன் புத்தகங்களை வெளியிடப் பதிப்பாளர்கள் பெரிதும் தயங்கும்போது, திரு. சிவராமன் அவர்கள் படங்களுடன் பாடல்களை வெளியிடுவதெனத் துணிச்சலாக முடிவு செய்தார்.

இந்தத் துணிகர முயற்சிக்குத் துணைநின்றவர் நண்பர் திரு. ஆழி. வே. ராமசாமி அவர்கள். சிறந்த குழந்தை நூல்களை இயற்றிப் பல பரிசுகளைப் பெற்ற அவர் இப்புத்தகத்திற்கு மிகுந்த விருப்பமுடன் படங்கள் வரைய முன்வந்தார்.

பதிப்பாளர் திரு. சிவராமன் அவர்களுக்கும், எழுத்தாளர்-ஓவியர் திரு. ஆழி. வே. ராமசாமி அவர்களுக்கும் என் மனங் கனிந்த நன்றி.

இளம் உள்ளங்களிலே பக்தி விதையைப் பாவும் ஒரு சிறு முயற்சியே இது. பக்தியுடன் இறைவனைப் பாடிப் பணிய முயலுவோருக்கு இந்நூல் ஓரளவாவது பயன்படுமென நம்புகிறேன்.

காரைக்குடி,
18—7—79.

அழ. வள்ளியப்பா

## பாடிப் பணிவோம்

*பதிப்புரை*

- குழந்தைகளும், பெரியவர்களும் பாடிப் பாடிப் பணிந்து உள்ளம் நெகிழ்வதற்கும் பக்தியைப் பெருக்குவதற்கும் உள்ளத்து உயர்ந்த கவிதைகளாக, **குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா** அவர்கள் பாடித் தந்திருக்கிறார்கள்.

---

- குழந்தைகளுக்கென்றே ஏராளமாகக் கவிதைகளாகவும், கதைகளாகவும், கட்டுரைகளாகவும் எழுதியிருக்கும் கவிஞர் மனத்தில் "பக்திப் பாக்கள்" ஒரு மலர் மாலையாக வெளிவர வேண்டும் என்று தோன்றியது செல்வி பதிப்பகத்தின் பேறு.

---

- எல்லோரும் பாடிப் பரவசமடைய, இந்நூல் பரவும் வகை செய்யும் பணியை எங்கள் செல்வி பதிப்பகத்திற்கு அளித்த அன்புக் கவிஞர் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

---

- பாடிப் பணிவோம் பக்தியுடன்
  பரமன் திருவருள் பெறுவோம் நாம்!

---

**செல்வி பதிப்பகம்**
*காரைக்குடி - 623 001*

**வீர. சிவராமன்**

# பாடிப் பணிவோம்

## பாடிப் பணிவோம்

**பக்திப் பாடல்கள்** பக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கணபதி | 9 |
| 2 | எங்கள் கணபதி | 10 |
| 3 | பால முருகன் | 12 |
| 4 | வருக, முருகா, வருக! | 13 |
| 5 | குன்றக்குடி வேலன் | 15 |
| 6 | பழநிப் பயணம் | 16 |
| 7 | கண்ணன் | 18 |
| 8 | சங்கரன் | 19 |
| 9 | மதுரை மீனாட்சி | 20 |
| 10 | சுந்தரேசர் - மீனாட்சி | 21 |
| 11 | கற்பகாம்பாள் | 23 |
| 12 | கலைமகள் | 24 |
| 13 | வேங்கடவன் | 25 |
| 14 | கொப்புடையம்மன் | 26 |
| 15 | தேவி கருமாரி | 27 |
| 16 | இராயவரம் முத்துமாரி | 29 |
| 17 | ஐயப்பன் | 30 |
| 18 | திருமகள் | 33 |
| 19 | ராமனும் - கண்ணனும் | 34 |
| 20 | ஒன்பது விளக்குகள் | 35 |
| 21 | கண்ணன் மீண்டும் பிறப்பானா? | 37 |
| 22 | திருவருள் பெறுவோம் | 39 |
| 23 | பாப்பாவுக்கு இரண்டு பாடல்கள் | 40 |

௨



# கணபதி

தொந்திக் கணபதி வா வா வா
வந்தே ஒருவரம் தா தா தா
கந்தனின் அண்ணா வா வா வா
கனிவுடன் ஒருவரம் தா தா தா

ஆனை முகத்துடன் வா வா வா
அவசியம் ஒருவரம் தா தா தா
பானை வயிற்றுடன் வா வா வா
பணிந்தேன்; ஒருவரம் தா தா தா

எல்லாம் அறிந்த கணபதியே,
எவ்வரம் கேட்பேன் தெரியாதா?
*நல்லவன் என்னும் ஒருபெயரை
நான்பெற நீவரம் தா தா தா.

---

*பெண்ணாக இருந்தால் 'நல்லவள்' என்று பாடலாம்.



# எங்கள் கணபதி

தும்பிக்கைபோல் சுழிபோட்டு
எங்கள் கணபதி – நாங்கள்
தொடங்குகின்றோம் எச்செயலும்
எங்கள் கணபதி
நம்பிக்கைகள் கூப்புகிறோம்
எங்கள் கணபதி - நாங்கள்
நலம்பெறவே அருள்புரிவாய்
எங்கள் கணபதி.

கந்தனுக்கு முன்பிறந்த
எங்கள் கணபதி – நல்ல
கருத்தைநெஞ்சில் விதைத்திடுவாய்
எங்கள் கணபதி
முந்திமுந்தி வந்துநிற்கும்
எங்கள் கணபதி – எங்கள்
முயற்சிஓங்க அருள்புரிவாய்
எங்கள் கணபதி

பரமசிவனார் பெரியமைந்தன்
எங்கள் கணபதி – அன்புப்
பார்வதித்தாய் பிரியமைந்தன்
எங்கள் கணபதி
அரசமரத்தின் அடியமர்ந்த
எங்கள் கணபதி – மக்கள்
அனைவருக்கும் எளியதெய்வம்
எங்கள் கணபதி



# பால முருகன்

சின்னச்சின்னக் குழந்தையம்மா
    எங்கள் பாலமுருகன் – புன்
சிரிப்புக்காட்டி மயக்கிடுவான்
    எங்கள் பாலமுருகன்.

வண்ணமயில் மீதிருப்பான்
    எங்கள் பாலமுருகன் - கையில்
வடிவேலும் வைத்திருப்பான்
    எங்கள் பாலமுருகன்.

பிள்ளையாரின் நல்லதம்பி
    எங்கள் பாலமுருகன் - சிறு
பிள்ளைகளின் இனியதோழன்
    எங்கள் பாலமுருகன்.

கள்ளமில்லா உள்ளங்கொண்டால்
    எங்கள் பாலமுருகன் - நம்மைக்
காத்தருள்வான்; காத்தருள்வான்
    எங்கள் பாலமுருகன்.

---



# வருக, முருகா, வருக!

அழகு மயிலில் ஏறி வருக,
வருக, முருகா, வருக!
ஆடும் மயிலில் ஏறி வருக,
வருக, முருகா, வருக!
பழகு தமிழில் பாடல் கேட்க
வருக, முருகா, வருக!
பக்தர் உள்ளம் மகிழும் வகையில்
வருக, முருகா, வருக!

சேவற் கொடியைக் கையில் ஏந்தி
வருக, முருகா, வருக!
தெய்வ யானை வள்ளி யோடு
வருக, முருகா, வருக!
ஆவ லாகக் காத்து நிற்போம்
வருக, முருகா, வருக!
ஆதி பரா சக்தி மைந்தா
வருக, முருகா, வருக!

குன்றின் மீது குடியி ருப்பாய்
வருக, முருகா, வருக!
குவல யத்தைக் காத்து நிற்பாய்
வருக, முருகா, வருக!
என்றும் எங்கள் நெஞ்சில் வாழ
வருக, முருகா, வருக!
இதயப் பூவால் பூசை செய்வோம்
வருக, முருகா, வருக!



# குன்றக்குடி வேலன்

குன்றக்குடி வேலனே
குறைதீர்க்கும் முருகனே!
என்றும்உனைப் பாடவே
இன்னலெலாம் ஓடுமே!

வெற்றிவடி வேலனே!
வினைதீர்க்கும் முருகனே!
சுற்றிநின்று பாடவே
துயரமெல்லாம் ஓடுமே!

வள்ளிமண வாளனே!
வரமருளும் முருகனே!
உள்ளமொன்றிப் பாடவே
ஓடும், துன்பம் ஓடுமே!



# பழநிப் பயணம்

பாதயாத்தி ரைசெய்து
பழனிவேலனே – உன்
பாதமலர் பணியவாரோம்
பழனிவேலனே.

ஆதிசக்தி இளையபிள்ளை
பழனிவேலனே – உன்
அருள்முகத்தைக் காணவாரோம்
பழனிவேலனே.

பலமைல்கள் தாண்டி நாங்கள்
பழனிவேலனே – உன்
பவளவாயைக் காணவாரோம்
பழனிவேலனே

குலம்சிறக்க குணம்சிறக்க,
பழனிவேலனே – உன்
குமிழ்சிரிப்பைக் காணவாரோம்
பழனிவேலனே.

உயர்ந்தமலை ஏறிநாங்கள்
பழனிவேலனே — உன்
ஒளிவடிவம் காணவாரோம்
பழனிவேலனே.

துயர்களெல்லாம் தீர்த்துவைக்கும்
பழனிவேலனே — உன்
சுடர்ஒளியைக் காணவாரோம்
பழனிவேலனே.

வெள்ளமெனத் திரண்டுநாங்கள்
பழனிவேலனே — உன்
வெற்றிவேலைக் காணவாரோம்
பழனிவேலனே.

கொள்ளைகொண்டாய் நெஞ்சமெல்லாம்
பழனிவேலனே — உன்
கோலமயில் காணவாரோம்
பழனிவேலனே.

பக்தரெல்லாம் ஒன்றுகூடிப்
பழனிவேலனே — உன்னைப்
பாடிப்பாடிப் பணிகிறோமே
பழனிவேலனே.

எக்குறையும் இல்லாமல்
பழனிவேலனே — நாங்கள்
இனிதுவாழ அருளவேணும்
பழனிவேலனே.



# கண்ணன்

கண்ணன் எங்கள் கண்ணனும்.
கார் மேக வண்ணனும்.

வெண்ணெய் உண்ட கண்ணனும்.
மண்ணை உண்ட கண்ணனும்.

குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனும்.

கூட்ட மாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனும்.

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனும்.

நச்சுப் பாம்பின் மீதிலே
நடனம் ஆடும் கண்ணனும்.

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனும்.

தூது சென்று பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனும்.

அர்ச்சு னர்க்குக் கீதையை
அருளிச் செய்த கண்ணனும்.

நல்ல வர்க்கே அருளுவான்
நாங்கள் போற்றும் கண்ணனும்.



# சங்கரன்

கங்கைத் தலையுடையான்;
கழுத்தில் பாம்புடையான்;

பொங்கிவரும் தண்ணிலவுப்
பிறைதிகழும் சடைமுடியான்;

மங்கைதனை இடப்பாகம்
வைத்திருக்கும் திருவுடலான்

சங்கரனைப் பணிவோமே
தகுதியெலாம் பெறுவோமே!

# மதுரை மீனாட்சி



மதுரையிலே கொலுவிருக்கும் மீனாட்சி - எங்கள்
மனத்தினிலே கொலுவிருப்பாய் மீனாட்சி.
மதுரகீதம் பாடிடவே மீனாட்சி - எங்கள்
மனம்நிறைந்து போகுதம்மா மீனாட்சி.

நான்குமாடக் கூடலிலே மீனாட்சி - நீ
நடுவிருந்து ஆட்சிசெய்வாய் மீனாட்சி.
பாங்குடனே உலகில்வாழ மீனாட்சி - மனப்
பக்குவத்தைத் தந்திடுவாய் மீனாட்சி.

தமிழ்வளர்த்த மதுரையிலே மீனாட்சி - உன்
தண்ணருளை வேண்டிவந்தோம் மீனாட்சி.
அமிழ்தமாகும் உன்அருளே மீனாட்சி - அதை
ஆசையோடு பருகவந்தோம் மீனாட்சி.

கலைவளர்த்த மதுரையிலே மீனாட்சி - உன்
கருணைமுகம் காணவந்தோம் மீனாட்சி.
நலம்பெருக்கும் நாயகியே மீனாட்சி - உன்னை
நாடிவந்தோம்; நலம்அருள்வாய் மீனாட்சி.



# சுந்தரேசர்-மீனாட்சி

சுந்த ரேசர் மீனாட்சி
துதிகள் பாடுவோம்
தூய மலர்க ளாலே மாலை
சூட்டி மகிழுவோம்.

இந்த உலகை இயக்கு கின்ற
சக்தி - சிவனையே
இதயந் தன்னில் வைத்துப் பூசை
என்றும் செய்குவோம்.

எந்தச் செயலும் தொடங்கு முன்னர்
நாம் நினைப்பவர்
இடைஞ்சல் ஏதும் வந்தி டாமல்
காத்து நிற்பவர்

தொந்தி வயிற்றுப் பிள்ளை யாராம்
அவரைப் பெற்றவர்
சுந்த ரேசர் மீனாட்சி
துணையை நாடுவோம்.

வேல் எடுத்து வினைகள் யாவும்
தீர்த்து வைப்பவர்
வேட னாக விருத்த னாக
வேடம் பூண்டவர்

பால் மணக்கப் பழம் மணக்கத்
தோன்றும் முருகனைப்
பாரி னுக்கே தந்த பெற்றோர்
அருளை வேண்டுவோம்.

நான்கு மாடக் கூடல் என்றே
விளங்கும் நகரமாம்
நாட்டினுக்கே திலக மாகத்
திகழும் நகரமாம்.

தேன் தமிழை வளர்ந்து வந்த
மதுரை நகரிலே
திகழும் தேவி சுந்த ரேசர்
புகழைப் பாடுவோம்

சுந்த ரேசர் மீனாட்சி
துதிகள் பாடுவோம்
தூய மலர்க ளாலே மாலை
சூட்டி மகிழுவோம்.




கற்பகாம்பாள் அன்னையே!
காத்தருள்வாய் என்னையே.

அற்புதங்கள் பலவும்
ஆற்றிய தாயே
அன்புடன் எனை நீ
ஆதரிப் பாயே.

பொற்பதம் பணிந்து நான்
போற்றிடு கின்றேன்
புகழொடு புவியினில்
நலமொடு வாழவே

கற்பகாம்பாள் அன்னையே!
காத்தருள்வாய் என்னையே.


# கலைமகள்



வெள்ளைத் தாமரை மீதினிலே
விளங்கும் தாயே வணங்குகிறேன்.
கள்ளம் கபடம் இல்லாமல்
கற்று நன்மை புரிந்திடவும்
உள்ளும் புறமும் தூய்மையுடன்
உலகில் வாழ்ந்தே உயர்ந்திடவும்
அள்ளி அள்ளிக் கலைகளையே
அளிப்பாய் அறிவை வளர்ப்பாயே.

o o o

கலையெலாம் பெற்ற தாயே
கற்பவர் போற்றும் தாயே
உலகிலே நிலைத்த செல்வம்
உன்அருட் செல்வ மன்றோ?
பலகலை பயில வேண்டிப்
பணிவுடன் வேண்டு கின்றேன்.
மலரினில் விளங்கும் நீ என்
மனத்திலும் விளங்கு வாயே!



# வேங்கடவன்

ஓங்குதிரு மலையதனின்
உச்சியிலே நின்றருளும்
வேங்கடவன் பெயர்சொல்ல
வினையெல்லாம் தீர்ந்திடுமே.
தீங்கெல்லாம் விலகிடுமே.
செயலெல்லாம் வென்றிடுமே.
ஏங்காதீர் உலகத்தீர்,
இதயமலர் சூட்டிடுவீர்.

ஏழுமலை உச்சியிலே
ஏறிஅவன் நின்றாலும்
எட்டுமப்பா அவன்பாதம்
இதழுருகும் பக்தருக்கே.
நீள்உருவம், நீலநிறம்
நின்றதிருக் கோலமதை
நினைத்தாலே தனிஇன்பம்!
நேர்பார்த்தால் பேரின்பம்!



# கொப்புடையம்மன்

இப்புவி தன்னைக் காக்க
எழிலருள் வடிவம் கொண்ட
கொப்புடை யம்ம னேஎம்
குறையெலாம் தீர்க்கும் தாயே!
உப்பிலாப் பண்ட மன்றோ
உனதருள் இல்லா வாழ்வு?
எப்பவும் எங்கள் நெஞ்சில்
இருந்திட வேண்டு மம்மா.



# தேவி கருமாரி

உலகமெல்லாம் காத்தருளும் கருமாரி — அம்மா
உன்னருளை வேண்டிவந்தோம் கருமாரி.
தலமகிமை அறிந்துவந்தோம் கருமாரி - உன்
சக்தியெல்லாம் உணர்ந்துவந்தோம் கருமாரி.

ஐந்துதலை நாகம்வந்து கருமாரி - உனக்(கு)
அழகுக்குடை பிடித்திடவே கருமாரி
ஐந்தொழிலைச் செய்துவரும் கருமாரி - நாங்கள்
அடிபணிந்தே அகமகிழ்ந்தோம் கருமாரி.

உடுக்குடனே சூலம்ஏந்தி கருமாரி - தீமை
ஒழித்திடவே உலகில்வந்தாய் கருமாரி,
கொடுத்துவைத்தோம் நாங்களெல்லாம் கருமாசி-உன்
கோயில்வந்து கும்பிடவே கருமாரி.

ஜொலிக்கும்உன்றன் திருஅழகில் கருமாரி - நாங்கள்
சொக்கிநின்றோம் சன்னதியில் கருமாரி.
குலுங்கும்உன்றன் சிலம்பொலியில் கருமாரி - அம்மா
குளிர்ந்ததுவே உள்ளமெல்லாம் கருமாரி.

பிணிகளெல்லாம் தீர்த்தருளும் கருமாரி — எங்கள்
பேதமையைப் போக்கியருள் கருமாரி.
துணிவுடனே நலங்கள்செய்ய கருமாரி — என்றும்
துணையிருக்க வேண்டுமம்மா கருமாரி.

மனக்கவலை தீர்த்தருளும் கருமாரி — எங்கள்
வாக்கினுக்கே ஒளிதருவாய் கருமாரி
குணங்களெல்லாம் சிறந்திடவே கருமாரி — உன்
கோயில்வந்து கும்பிடுவோம் கருமாரி.

கல்விபல கற்றவர்க்கும் கருமாரி - உன்
கருணையின்றேல் என்னபயன் கருமாரி?
செல்வமிகப் பெற்றவர்க்கும் கருமாரி — உன்
திருவருளே பெரியசெல்வம் கருமாரி.

பிள்ளைகளைக் காத்தருள்வாய் கருமாரி - எங்கள்
பிழைகளெல்லாம் பொறுத்தருள்வாய் கருமாரி
உள்ளமதில் குடியிருத்தி கருமாரி - நாங்கள்
உள்ளவரை பூசைசெய்வோம் கருமாரி.



# இராயவரம் முத்துமாரி

சக்திமிக்க தெய்வம்எங்கள்
முத்துமாரி அம்பிகை,
சரணடைந்த பேருக்கெல்லாம்
அருள்சுரக்கும் அம்பிகை.
பக்தர்நெஞ்சில் குடியிருக்கும்
முத்துமாரி அம்பிகை.
பதம்பணிந்தால் இதம்குளிர்ந்தே
பாதுகாக்கும் அம்பிகை.

தீமையாவும் சுட்டெரித்துச்
சீர்பெருக்கும் அம்பிகை.
செல்வம், கல்வி, நீண்டஆயுள்
நல்கும் எங்கள் அம்பிகை.
நாமெல்லோரும் சேமமாகப்
பூமிதன்னில் வாழவே
ஏாயவரம் மாரியம்மன்
நல்லருளை வேண்டுவோம்.



# ஐயப்பன்

உமையராய்ப் பிறந்தவர்கள்
பேசக் கண்டோம்.
ஊனமுற்றோர் குடுகுடென
ஓடக் கண்டோம்.
சேமமுடன், பிணியுற்றோர்
திகழக் கண்டோம்.
தீயவர்கள் மனம்மாறித்
திருந்தக் கண்டோம்.

சாமிஉனைச் சரண்எனவே
நாங்க ளெல்லாம்
தளர்வின்றி மனமுருகிப்
பாடு கின்றோம்.
பூமிதனில் உனையன்றி
எங்க ளுக்குப்
புகலிடமே இல்லையெனப்
புரிந்து கொண்டோம்.

இருமுடியைத் தாங்கியுமே
விரதத் தோடு
இருளடைந்த வனத்தினிலே
நடந்து வந்தோம்.
சுறுசுறுப்பாய்க் கரியமலை
கடந்து வந்தோம்.
தூய்மைபெறப் பம்பாவில்
குளித்து வந்தோம்.

ஒருமையுடன் பதினெட்டுப்
படியும் ஏறி
உன்னுடைய திருஉருவைக்
காணு கின்றோம்.
அருளுருவே; ஐயப்பா
உன்னை யன்றி
ஆதரவு வேறெதுவும்
இல்லை யப்பா.

வரிப்புலியின் மீதேறி
வந்த சாஸ்தா.
மகிஷிதனை சம்ஹாரம்
செய்த சாஸ்தா.
திருவருளால் உலகமெலாம்
காக்கும் சாஸ்தா.
தீமையெலாம் பறந்தோடச்
செய்யும் சாஸ்தா.

அருமறைகள் பெருமையுடன்
போற்றும் சாஸ்தா.
ஆனந்த ஜோதியெனத்
திகழும் சாஸ்தா.
அருமைமிகு சபரிமலை
தன்னில் வாழும்
ஐயப்பா, உன்னடியே
சரண மப்பா.

ஐயப்ப சாமியே, சரணம், சரணம்.
அருட்பெருங் கடலே சரணம், சரணம்.
துய்யநன் மணியே சரணம், சரணம்.
துயர்களைத் தீர்ப்பாய் சரணம், சரணம்.

ஐயப்ப சாமியே சரணம், சரணம்.
அற்புதம் புரிவாய் சரணம், சரணம்.
மெய்மையின் வடிவே, சரணம், சரணம்.
மேன்மைகள் தருவாய் சரணம், சரணம்.

ஐயப்ப சாமியே சரணம், சரணம்.
அபயம் அளிப்பாய் சரணம், சரணம்.
வெய்யவன் முன்னே பனிபோல் எங்கள்
வினைகள் தீர்ப்பாய் சரணம், சரணம்.



# திருமகள்

திருமக ளேஉன்
திருவடி பணிவோம்.
அருள்தனை வேண்டி
அனுதினம் தொழுவோம்.

வளமெலாம் எங்கள்
வாழ்வினில் சேர்ப்பாய்.
விளைந்திட நலங்கள்
வெற்றிநீ அருள்வாய்.

பொன்னையும் பொருளையும்
புவியினுக் களிப்பாய்.
நின்னருள் பெற்றே
நிலைத்திடச் செய்வாய்.

பஞ்சமும் பசியும்
பாரினில் ஒழிப்பாய்.
தஞ்சமென் றுன்றன்
தாள்பணிந் தோமே!

# ராமனும்-கண்ணனும்

ராமன் பிறந்தது நவமியிலே.
நட்ட நடுப்பகல் வேளையிலே.

கண்ணன் பிறந்தது அஷ்டமியில்.
காரிருள் நடுநிசி வேளையிலே.

ராமன் பிறந்தது அரண்மனையில்.
நன்றாய்ப் பார்த்தனர் மக்களெல்லாம்.

கண்ணன் பிறந்தது கடும்சிறையில்.
கண்டவர் தாயும் தந்தையுமே.

சூரிய குலத்தில் ராமனுமே
தோன்றினன், பெருமை தோன்றிடவே.

சந்திர குலத்தில் கண்ணனுமே
வந்தனன், பெருமை தந்தனனே.

ராமன் பெற்ற குணங்களெலாம்
நாமும் பெற்றுச் சிறந்திடுவோம்.

கண்ணன் கீதையில் கூறியதைக்
கருத்தில் கொண்டே உயர்ந்திடுவோம்.

# ஒன்பது விளக்குகள்

ஒன்பது விளக்குகள் ஏற்றிவைத்தோம்
ஒளியினைச் சுற்றிலும் நாம்அமர்ந்தோம்
அன்னையின் திருவருள் பெறவேண்டி
அனைவரும் சேர்ந்து பாடிடுவோம்.

அம்மன் சன்னதி முன்னாலே
அருள்ஒளி பரவும் வேளையிலே
நம்மைக் காத்திடும் தேவியிடம்
நன்மை பெருக வேண்டிடுவோம்.

இருளை அகற்றிடும் ஒளியேபோல்
இதயந் தன்னைச் சூழ்ந்துள்ள
கருமை முற்றிலும் அருள்ஒளியில்
கரைந்தே மறைய வேண்டிடுவோம்.

நாட்டை ஆளும் பொறுப்பினையே
நாளை ஏற்கப் போகின்ற
வீட்டு விளக்காம் குழந்தையெலாம்
மேன்மை பெறஅருள் வேண்டிடுவோம்.

வயலில் விளைச்சல் பெருகிடவே
மா, பலா, வாழை செழித்திடவே
செயல்கள் யாவும் சிறந்திடவே
தேவியின் திருவருள் வேண்டிடுவோம்.

ஊருணி குளங்கள் நிறைந்திடவே
ஊரார் எல்லாம் மகிழ்ந்திடவே
சீருடன் சிறப்புடன் திகழ்ந்திடவே
தேவியின் பேரருள் வேண்டிடுவோம்.

நல்லவ ராக விளங்கிடவே
நலங்கள் பலவும் பெருகிடவே
வல்லமை பெற்று வாழ்ந்திடவே
மலரடி போற்றி வணங்குகிறோம்.

# கண்ணன்
# மீண்டும்
# பிறப்பானோ?

குழந்தையாக மீண்டும்கண்ணன்
பிறக்க மாட்டானோ? - புல்லாங்
குழல்எடுத்தே ஊதிஎன்னை
மயக்க மாட்டானோ?

என்னைஅவன் தோழனாக
ஏற்க மாட்டானோ? - தினம்
வெண்ணெயில்ஓர் பங்குபோட்டு
நீட்ட மாட்டானோ?

சின்னஞ்சிறு வாயைக்கொஞ்சம்
திறக்க மாட்டானோ? - என்
கண்ணில்இந்த உலகமுழுதும்
காட்ட மாட்டானோ?

மாடுகன்றைக் காட்டில்ஓட்டி
மேய்க்க மாட்டானோ? - அங்கே
ஓடிஆட என்னைக்கூட்டுச்
சேர்க்க மாட்டானோ?

மலையெடுத்துக் குடையைப்போலப்
பிடிக்க மாட்டானு? - என்
தலையில்மழை விழுவதையும்
தடுக்க மாட்டானு?

கீதைதன்னைத் திரும்பவுமே
கூற மாட்டானு? - அதைக்
காதில்கேட்டுச் சிறந்தவனுய்
மாற மாட்டேனு? - நான்
மாற மாட்டேனு?





# திருவருள் பெறுவோம்

ஐங்கரனே, ஓம், ஐங்கரனே,
அனைத்திலும் முந்தி இருப்பவனே!

அறுமுகனே, ஓம், அறுமுகனே,
அன்பருக் கின்பம் அருள்பவனே!

சங்கரனே, ஓம், சங்கரனே,
சரணடைந் தோரைக் காப்பவனே!

உமையவளே, ஓம், உமையவளே,
உலகத் தாயாய்த் திகழ்பவளே!

கலைமகளே, ஓம், கலைமகளே,
கல்விக் கதிபதி யானவளே!

திருமகளே, ஓம், திருமகளே,
செல்வமும் அழகும் தருபவளே!


தினம் தினம்
நாங்கள்
தொழுவோமே.

திருவருள்
தன்னைப்
பெறுவோமே!

# பாப்பாவுக்கு இரண்டு பாடல்கள்

## காலையில்

பொழுதெப்போ விடியும்?
பூ எப்போ மலரும்?
சிவன் எப்போ வருவார்?
வரம் எப்போ தருவார்?



## இரவில்



அரின்னு பேர்சொல்லி
அச்சுதான்னு பாய்விரிச்சு
கிருஷ்ணன்னு படுத்தவர்க்கு
கேடில்லை ஒரு நாளும்!

கோவிந்தான்னு படுத்தவர்க்கு
குறைவில்லை ஒரு நாளும்!

*(இரண்டும் நாட்டுப் பாடல்கள்)*

# செல்வியின்
# புதிய நூல்கள்

## வரலாற்று நாவல்

இளவெயினி—அய்க்கண் ரூ. 17-00

## இளைஞர் நூல்கள்

### ஆழி. வெ. இராமசாமி

1. விஞ்ஞான வேடிக்கைகள் ரூ. 2-40
2. ஏழைப் பெண் ரூ. 4-75
3. அத்திப் பழம் ரூ. 4-75

### பூவை. எஸ். ஆறுமுகம்

தாயின் மணிக்கொடி ரூ. 3-00

ஆனந்த விகடன் போட்டிக்கு வந்த சிறந்த சிறுகதைகள்
பதினைந்து சிறுகதைகள்